# ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை

# நேரம் வினா எண் **343,** தலைப்பு "உலகியல் ஆசைகளும் ஆன்மீக ஏக்கமும்"

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் உள்புறமாக தேடுவது என்றபுத்தகத்தின் பக்கம் *49-53*லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:
எனக்கு உலகியல் ஆசைகள் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. இதை தவிர்ப்பது எவ்வாறு.

பதில் அனில்குமார் சார்:
இதற்கு ஏதும் செய்ய முடியாது.
எதனால் ஆசைகள் உண்டாகின்றன என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.ஆசைகளுக்கு மூல காரணம் மனது தான்.மனதிலிருந்தே ஆசைகள் பிறக்கின்றன.மனது கடவுளை பற்றியே சிந்திக்கும் போது,இறை நாமஸ்மரணையில் ஈடுபடும் போது பஜனை பாடல்களை பாடும் போது தியானத்தில் இருக்கும் போது மனதில் ஆசைகள் தோன்றுவதில்லை.உலக வாழ்க்கையை நோக்கி திரும்பும் போது தான் மனதில் ஆசைகளும் தோன்றுகின்றன.
நம் ஸ்வாமி சொல்கின்ற ஒரு உதாரணம் பார்ப்போம்.
ஒரு கை விசிறியை உங்களை நோக்கி விசிறினால் உங்களுக்கு காற்று வரும்.அதை என்னை நோக்கி விசிறினால் எனக்கு காற்று வரும்.அது போல மனதை உலகை நோக்கி திருப்பினால் ஆசைகள் கொட்டி நம்மை திணற வைத்து விடும்.மனதை உள் புறமாக திருப்பினால் ஆத்மாவுடன் ஒன்றி தெய்வானந்தத்தை அனுபவிக்கலாம்.

அடுத்த கேள்வி:
ஹிருதயத்தை கட்டுப்படுத்தாமலேயே ஆசைகளை துறக்க இயலுமா.

பதில் அனில்குமார் சார்:
மனது இதயம் இரண்டும் வேறு வேறானது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.
மனது ஆசைகளாலானது.ஹிருதயம் உணர்வுகளால் ஆனது.மனம் இரட்டை தன்மை கொண்டது.ஹிருதயம் இரட்டை தன்மை இல்லாதது.மனம் வெளிப்புறமாக செல்ல கூடியது.ஹிருதயம் உள் புறமாக திரும்பகூடியது.

மனம் ஆசைகளின்பாற் பட்டது.ஹிருதயமோ நியாய அநியாயங்களை உணர கூடியது.மனம் உலகியலானது.ஹிருதயம் ஆன்மீகமானது.
எனவே ஹிருதயத்தை துறப்பது என்பது உங்கள் ஆன்மாவை உள்ளுணர்வை கட்டுப்படுத்துவதாகும்.அப்படியானால் நீங்கள் உள் புறமாக இறையுணர்வை தேடி பெற விரும்பவில்லை என்றாகிறது.நீங்கள் உலகத்தின் விருப்பு வெறுப்புகளிலேயே உழன்று திரிய விரும்புகிறீர்கள்
மனதை பின்பற்றியே வாழ்க்கையில் ஓடினால் பிரச்சினைகள் வந்து கொண்டே தான் இருக்கும்.எனவே ஹிருதயத்தை கட்டுப்படுத்துவது கூடாது.ஹிருதயம் விசாலமாக திறந்திருந்தால்
தான் மனதில் தோன்றுகின்ற தீய எண்ணங்களை கட்டுப்படுத்த முடியும்.

அடுத்த கேள்வி: காய்கறிகளுக்கும் உயிர் இருக்கத்தானே செய்கிறது.அவைகளை வெட்டி சமைப்பது மட்டும் சரியானதா.

பதில் அனில்குமார் சார்:
கல் மண் பாறை இவைகளுக்கு உள்ளுணர்வு மிக குறைவு.
அதை விட தாவரங்களுக்கு சற்று அதிகம்.அதையும் விட விலங்குகளுக்கு இன்னும் அதிகம்.இவை எல்லாவற்றையும் விட மனிதனுக்கு உள்ளுணர்வு புலன்உணர்வு நம்பிக்கை என எல்லாமே மிக அதிகம்.
விலங்குகளை கொல்வது வன்முறை ஆகும்.மாமிசத்துக்காக வளர்க்கப்படும் விலங்கு பண்ணைகளுக்கு நேரில் சென்று பார்த்தால் நாம் பதறிப்போய் விடுவோம்.மாமிசம் உண்ண வேண்டும் என்ற ஆசையே நமக்கு வராது.
ஆனால் தாவரங்கள் மனிதனுக்கு பயன்படுவதற்காகவே படைக்கப்பட்டுள்ளன.ஒரு விலங்கை கொல்லும் போது அழிந்து படுகிறது.ஆனால் ஒரு செடியிலிருந்து காயை பறிக்கும் போது செடிக்கு ஒன்றும் ஆவதில்லை.

அடுத்த கேள்வி:
கடவுள் எங்கும் நிறைந்த பரம் பொருள்.அவர் குணங்களுக்கு அதாவது ஆசைகளுக்கு அப்பாற்பட்டவர்.
ஆனால் இந்த பிரபஞ்சத்தை அவர் சிருஷ்டித்தற்கு காரணம் அவருக்கு உருவம் எடுக்க வேண்டும் என ஏற்பட்ட ஆசை தானே காரணம்

பதில் அனில்குமார்: சார்:
குழந்தை கடற்கரை மணலில் வீடு கட்டுகிறது.பிறகு தானே அதை காலால் உதைத்து அழிக்கிறது.சிரித்து மகிழ்கிறது. இது ஆசையினாலா.
இல்லை.ஆசை என்பது ஒரு நோக்கத்திற்காக உருவாவது.இல்லாத ஒன்றை பெற விரும்புவது.என்னிடம் கார் இல்லை.வீடு இல்லை.அதை நான் பெற விரும்புகிறேன்.அது ஆசை.ஆசை என்பது எதிர்

காலத்திற்கான ஒரு விருப்பம்.ஆனால் கடவுள் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டவர்.அவர் அனுபவித்து உணர கூடியவர்.சோதித்தும் உணரபடுபவர்.
அவர் ஒரு பொருளல்ல.ஒரு மனிதரல்ல.அவர் எங்கேயும் எப்போதும் நிறைந்துள்ள பேருணர்வு.

அடுத்த கேள்வி: சாதாரண ஆசைகளும் ஆன்மீக ஏக்கமும் எவ்விதம் வேறுபடுகின்றன.

பதில் அனில்குமார் சார்:ஆசைகள் உலகியலானது.உலக நடவடிக்கைகளை சார்ந்தது.மனம் உடல் சம்பந்தப்பட்டது.ஆன்மீக பாதையில் ஆசைகள் என கூறாமல் ஏங்குதல் என்று கூறுவதே சரியானதாகும்.
ஆசை என்பது ஒருவருக்கொருவர் வித்தியாசபடும்.
எனக்கு ஒரு மாளிகை வேண்டும் என நான் விரும்புகிறேன்.அது கிடைக்காவிட்டாலும் நான் உயிர் வாழ முடியும்.ஆனால் குடி நீர் எனது தேவை.அது இல்லாமல் நான் உயிர் வாழ முடியாது.அதைபோல் ஆன்மீக தேடலும் அவசிய தேவையாகும்.

அடுத்த கேள்வி
ஆசைகளுக்கு உச்சவரம்பு வைத்து கொள்வது என்பதை தினசரி வாழ்க்கையில் நாம் கடைபிடிப்பது எவ்வாறு.

பதில் அனில்குமார் சார்:
பகிர்ந்து கொள்வதன் மூலம் ஆசைகளுக்கு உச்சவரம்பு கொண்டு வர முடியும்.இரண்டு லட்டு உங்களுக்கு கிடைத்தால் ஒன்றை பிறருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
மிதம் ஹிதம். நமது தேவைகள் மிதமானதாக இருக்க வேண்டும்.
சாதாரண மொபைல் போன் போதுமானது.
பிறகு ஏன் இன்டர்நெட் வீடியோ போனை வாங்க வேண்டும்.இனிப்பே சாப்பிட வேண்டாம் என சொல்லவில்லை.இரண்டு சாப்பிடுவதற்கு பதில் ஒன்று சாப்பிடுங்கள்.
என்னுடைய தந்தைக்கு குறைவான சம்பளமே.அவரிடம் போய் எனக்கு ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள் வாங்கி தர நான் கேட்க கூடாது.குடும்ப சூழ்நிலையை புரிந்து கொள்ள வேண்டும்.
அனைவரும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம் ஜெய் சாயிராம்.